# நிதிப் பகிர்வு முறையை மாற்றிடுக!... முதல்வர் உரை முதல் பக்கத் தொடர்ச்சி

சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பதன் மூலமாகவே அவற்றின் வளர்ச்சியைத் தக்கவைப்பதுடன் அந்த மாநிலங்களின் வளர்ச்சிப் பாதைக்கும் வழிவகுக்க முடியும், என்பதையும் நிதிக்குழு கவனத்தில் கொள்ள வேண்டும்.

### நிதியை குறைத்தால் – நாட்டின் வளர்ச்சி பாதிப்படையும்!

சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதியைக் குறைத்து வளர்ச்சியை எதிர்நோக்கும் பகுதிகளுக்கு நிதி ஆதாரங்களை மடைமாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய மாநிலங்களுக்கு இறுதியாககிடைக்கும்வரிப்பகிர்வும்குறைந்துவிடும் என்பதே உண்மை.

குறுகிய காலக் கண்ணோட்டத்தோடு செயற்கையாக உருவாக்கப்படும் நிதி மறுபகிர்வுமுறை எதிர்காலத்தில் எதிர்பார்த்த பலன்களை தராது என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சிறந்த நிர்வாக அமைப்புடன் திறம்பட செயலாற்றி வரும் தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்கள் தொடர்ந்து வளர்ச்சி அடையும் வகையில் நிதிப் பகிர்வு முறையை மாற்றுவதன் மூலம் இந்தியத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் பெரும் பங்களிப்பு செய்திட முடியும்.

### தேவையான நிதியை வழங்க புதிய அணுகுமுறை வேண்டும்!

முந்தைய நிதிக் குழுக்களின் பரிந்துரைகளைக் கவனமாக ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கடந்த காலங்களில் வளர்ச்சி குன்றிய மாநிலங்களுக்கு தொடர்ந்து அதிக நிதியை வழங்கிய போதும், பல மாநிலங்கள் எதிர்பார்த்த அளவிற்கு வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. கடந்த 45 ஆண்டுகளாக நம் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மறுபகிர்வு முறையின் மூலம் எதிர்பார்த்த அளவு வளர்ச்சி ஏற்படவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

எனவே, 16-வது நிதிக் குழு இத்தகைய அணுகுமுறையை மறுபரிசீலனை செய்து நாட்டின் பின்தங்கிய மாநிலங்களுக்கு உரிய நிதி ஆதாரங்களை வழங்கிடும் போது, வளர்ந்த மாநிலங்களின் வளர்ச்சியைப் பாதிக்காத அளவில், தேவையான நிதியை வழங்குவதற்கான ஒரு புதிய அணுகுமுறையை வடிவமைப்பதற்கான தேவை இன்று உருவாகி இருப்பதாகவே நம்புகிறேன்.

இந்நிலையில், தமிழ்நாடு சந்தித்து வரும் மூன்று குறிப்பிடத்தக்க சவால்களை நிதிக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

**கடந்த சில ஆண்டுகளாக, இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தினால் தமிழ்நாடு பெரும் பேரழிவினை சந்தித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு புயல்கள் மற்றும் இடைவிடாத மழைப்பொழிவு மற்றும் வெள்ளத்தினால் பொதுமக்களின் உயிர், உடைமை மற்றும் வாழ்வாதாரம் மட்டுமின்றி மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகளும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றன.**

**இயற்கைப் பேரழிவுகளினால் ஏற்படும் இழப்புகளை சரிசெய்வதற்கு பெரும் அளவிலான நிதி மாநில அரசால் செலவிடப்பட வேண்டிய தேவை உள்ளதால், வழக்கமான வளர்ச்சித் திட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்க முடியாத சூழல் ஏற்படுகிறது. எனவே இத்தகைய பேரிடர் துயர் தணிப்பு பணி மற்றும் மறு சீரமைப்பு நடவடிக்கைகளை மாநிலங்கள் உடனுக்குடன் மேற்கொள்ளும் வகையில் உரிய நிதியை வழங்கிட நிதிக்குழு பரிந்துரைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.**

**அடுத்து, தமிழ்நாட்டில் அதிகமாக வளர்ந்து வரும் முதியவர்களின் எண்ணிக்கை மற்றும் இதன்காரணமாக மாநில மக்கள் தொகை அமைப்பில் ஏற்படும் மாற்றம் குறித்தும் நிதிக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன். தற்போது தமிழ்நாட்டின் மக்கள் தொகையின் சராசரி வயது 36.4 ஆண்டுகள். இது உத்திரப்பிரதேச மாநிலத்தின் சராசரி அளவைவிட 9.5 ஆண்டுகள் அதிகம்.**

### வயதானவர்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு மாறும்!

16-வது நிதிக்குழுவின் பரிந்துரைக் காலம் முடிவடையும் பொழுது தமிழ்நாட்டின் சராசரி வயதானது 38.5 ஆண்டுகளாக இருக்கும். அதன்படி, நாட்டிலேயே வயதானவர்கள் அதிகம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உருவெடுக்கும்.

**9-வது நிதிக் குழு பரிந்துரைத்த 7.931 சதவீதத்திலிருந்து கடந்த 15-வது நிதித் குழுபரிந்துரைப்படி 4.079 சதவீதமாக தமிழ்நாட்டிற்கான வரி பகிர்வு தொடர்ந்து வீழ்ச்சியை சந்தித்து வந்துள்ளது. நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் பல முன்னோடி நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, செம்மையான நிர்வாகத்தை தொடர்ந்து நல்கி வரும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை தொய்வடையச் செய்து தண்டிப்பதைப் போல தற்போதைய வரிப் பகிர்வு முறை அமைந்துள்ளது.**

தமிழ்நாடு இதுவரை பெற்று வந்துள்ள மக்கள்தொகை அடிப்படையிலான பயன் வேகமாகக் குறைந்து வருவதையும் சமூகப் பாதுகாப்புத் தேவைகள் அதிகரித்து வருவதையும் இது பிரதிபலிக்கிறது. அதிகரித்து வரும் முதியவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு எதிர்வரும் பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு, தேவையான பொருளாதார வளர்ச்சியினை அடைவதுடன் பல்வேறு துறைகளில் அதிக முதலீடுகளை உடனடியாக செய்ய வேண்டியுள்ளது.

அந்த முயற்சியை மேற்கொள்ளாவிடில் முன்னேறிய மாநிலமாக மாறுவதற்கு முன்னால், முதியவர்கள்அதிகம் வாழும் மாநிலமாக தமிழ்நாடு மாறிவிடும் அபாயத்தை இன்று சந்தித்து வருகிறது. இந்த மிகமுக்கியமான கருத்தை நிதிக்குழு கவனத்தில் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்வதுடன், இந்த சமூக முதலீடுகளுக்கு தேவையான நிதி ஆதாரத்தையும் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**மூன்றாவதாக, நாட்டிலேயே அதிக நகரமயமாக்கலைச் சந்தித்து வரும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. நகர்ப்புர கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதும், அதற்கான நிதி ஆதாரங்களை பெருக்குவதும் தமிழ்நாடு சந்தித்து வரும் ஒரு மிக முக்கியமான சவால்களில் ஒன்றாக இருக்கிறது.**

### நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிக நிதி!

**குறைவான நில வளம் மற்றும் நீர் வளம் ஒருபுறம், தொடர்ந்து அதிகரித்து வரும் மக்கள் தொகை மறுபுறம் - இவற்றுக்கு இடையே சென்னை போன்ற நகரங்களில் வாழ்ந்திடும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதாரம், சாலை வசதி மற்றும் தெரு விளக்குகள் அமைத்திடத் தேவையான முதலீடுகளைச் செய்திடவும் உள்ளாட்சி அமைப்புகளின் தரமான சேவைகளைத் தொடர்ந்து வழங்கிடவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவிலான நிதி மற்றும் மானியங்களை வழங்கிட நிதிக்குழு பரிந்துரை செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.**

மாநிலங்களின் செலவினங்களுக்கான தேவை தொடர்ந்து அதிகமாக உயர்ந்து வரும் வேளையில் சரக்கு மற்றும் சேவை வரி (GST)முறை நடைமுறைக்கு வந்த பின்னர் மாநில அரசுகள் தங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் பல தடைகளை சந்தித்து வருகின்றன. இதனால் ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வை மாநிலங்கள் மிகவும் சார்ந்திருக்கக் கூடிய இன்றைய காலகட்டத்தில் 16-வது நிதிக்குழுவின் பங்கும், அதன் பரிந்துரைகளும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

16-வது நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் பணிவுடன் சொல்லிக் கொள்வதெல்லாம் தமிழ்நாட்டின் 8 கோடி மக்களும் இந்த நிதிக்குழுவின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார்கள். மாநிலங்களின் வளர்ச்சியை உறுதி செய்வதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைந்திடும் நோக்கில் இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்தை வலுப்படுத்தும் ஒரு அரியவாய்ப்பை காலம் நமக்கு வழங்கி இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு 16-வது நிதிக்குழு உரிய பரிந்துரைகளை வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

### இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்வை வழங்கிடுக!

தமிழ்நாடு அரசின் சார்பாக நிதிக்குழுவின் பரிசீலனைக்கு வழங்கப்பட இருக்கும் விரிவான அறிக்கையினை கவனத்துடன் பரிசீலித்து, கடந்த காலங்களில் பல்வேறு நிதிக்குழுக்களின்பரிந்துரைகளினால்தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்வை 16-வது நிதிக்குழு வழங்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

சமச்சீரான வாய்ப்புகளை வழங்கும் முற்போக்கான அணுகுமுறையின் மூலமாகவே இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்தின் உண்மையான நோக்கத்தை அடைந்திட இயலும் என்பது எங்களுடைய திடமான நம்பிக்கை. ஒவ்வொரு மாநிலமும் அவற்றின் முழு திறனுக்கு ஏற்றவகையில் வளர்ச்சியை எட்டுவதன் மூலமாகவே இந்தியத் திருநாட்டை உலக அரங்கில் பொருளாதார வலிமை கொண்ட ஒரு மாபெரும் நாடாக நிலைநிறுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உரையாற்றினார்.

---

## மணிப்பூரில் மனித உரிமைகளைக் காப்பாற்றத் தவறிய

# மோடி அரசின் தோல்வியின் வெளிப்பாடு!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, நவ. 19 -* மணிப்பூரில் குழந்தை கள், பெண்கள் என பாகுபாடின்றி இனப்படுகொலை நடைபெறுகின்றன. இது மனித உரிமைகளைக் காப்பாற்ற தவறிய மோடி அரசின் தோல்வியின் வெளிப்பாடு என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 18.11.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

இந்திய ஜனநாயகத்தின் கறுப்பு அத்தியாயமாக மணிப்பூர் படுகொலைகள் பதிவாகி வருகின்றன. குழந்தைகள், பெண்கள் என பாகுபாடின்றி கொன்றொழிக்கப்படும் இந்த இனப்படு கொலை, நமது அரசியல் சாசனத்தின் மீதான நேரடி தாக்குதலாகும்.

எட்டு மாத குழந்தை உட்பட ஆறு பேரின் உடல்கள் நதியில் மிதந்த கொடூரம்; 220க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு, 50,000 பேர் அகதிகளான பேரவலம்; போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்ற குற்றங்களுக்கு துணை போகும் ஆளும் கட்சி; மக்களின் உயிர்களை விட அதிகார நாற்காலியே முக்கியம் என்ற அவலம் மணிப்பூரை முற்றாக சிதைத்துக்கொ ண்டுள்ளது.

ஆனால் மறுபுறம், வடகிழக்கில் அமைதி என்று மோடி அரசு பொய் பிரச்சாரம் செய்கிறது இந்துகிறிஸ்தவ மோதலை உருவாக்கி அரசியல் ஆதாயம் தேடும் தமது கட்சியின் கயமைத் தனத்தை மறைத்து, மணிப்பூர் முதல் வரை மாற்ற மறுத்து, உச்சநீதி மன்றத்தின் கண்டனங்களையும் புறந்தள்ளும் அராஜகத்தை பா.ஜ.க. கூட்டணி அரசு அரங்கேற்றி வருகிறது.

சமீபத்தில் நடந்த என்கவுண்ட்டர் படுகொலைகள், ஒரு தரப்பினரின் வன்முறையைக் காரணம் காட்டி சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டம் மீண்டும் அமலாக்கம் என்பது உள்பட முற்றிலும் கொடூரமான பாதையில் பா.ஜ.க. அரசு பயணிக்கிறது. மணிப்பூரில் வாழும் இருபெரும் இன மக்களுக்கிடையே திட்டமிட்டு வெறுப்புணர்வை வளர்த்துவிட்ட பயங்கரத்திற்கு உடனடியாக முடிவு கட்டியாக வேண்டும் என்ற குரல் வலுவாக எழுந்துள்ளது. இன்னும் குறிப்பாக பெண்களை ஆயுதமாக்கி பழி வாங்கும் கொடூரமும் சமூக ஒற்றுமையை சிதைத்துள்ள பா.ஜ.க.வின் மதவெறி அரசியலும் ஒட்டுமொத்த தேசத்தையும் தலை குனியச் செய்துள்ளது.



தீக்கதிர்

2024 நவ.18 திங்கட்கிழமை

**மணிப்பூரில் அரசியல் சாசனத்தை சிதைக்கும் பாஜக**

இந்திய ஜனநாயகத்தின் கறுப்பு அத்தியாயமாக மணிப்பூர் படுகொலைகள் பதிவாகி வருகின்றன. குழந்தைகள், பெண்கள் என பாகுபாடின்றி கொன்றொழிக்கப்படும் இந்த இனப்படுகொலை, நமது அரசியல் சாசனத்தின் மீதான நேரடி தாக்குதலாகும்.

எட்டு மாத குழந்தை உட்பட ஆறு பேரின் உடல்கள் நதியில் மிதந்த கொடூரம்; 220-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு, 50,000 பேர் அகதிகளான பேரவலம்; போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்ற குற்றங்களுக்கு துணை போகும் ஆளும் கட்சி; மக்களின் உயிர்களை விட அதிகார நாற்காலியே முக்கியம் என்ற அவலம் - மணிப்பூரை முற்றாக சிதைத்துக்கொண்டுள்ளது.

முதல்வரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும்; குற்றவாளிகளை கைது செய்து கடும் தண்டனை வழங்க வேண்டும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய இழப்பீடு வழங்க வேண்டும்; ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்ற குரல்கள் தற்போது, மணிப்பூர் பா.ஜ.க.விற்குள்ளேயே வலுத்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

மணிப்பூர் நெருக்கடி, வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை அல்ல. இது இந்திய ஜனநாயகத்தின் மீதான நேரடி தாக்குதல். அரசியல் சாசனம் உறுதியளிக்கும் சமத்துவம், மதச்சார்பின்மை, மனித உரிமைகள் ஆகியவற்றை காப்பாற்ற தவறிய மோடி அரசின் தோல்வியின் வெளிப்பாடு.

நாட்டின் ஒற்றுமையை சிதைக்கும் இந்த அராஜக ஆட்சியை மக்கள் தட்டிக்கேட்க வேண்டிய நேரம் இது. இல்லையேல் மணிப்பூர் இன்று, நாளை நாடு முழுவதும் என்ற நிலை உருவாகும். ஜனநாயகத்தை காப்பாற்ற மக்கள் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது!

இவ்வாறு அத்தலை யங்கத்தில் கூறப்பட்டுள் ளது.

---

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவிப்பு!

பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.மணிவண்ணன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ப.கவியரசு, எம்.ஏ., பி.எல்., (2/110, கிழக்கு தெரு, காடூர் அஞ்சல், குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் - 621 716) அவர்கள் பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.11.2024

**என்.ஆர்.இளங்கோ**
செயலாளர்
தி.மு.க. சட்டத் துறை



மயிலாடுதுறை மாவட்டம், நீடூரைச் சேர்ந்த முபாரக் அலி, தாய்லாந்து நாட்டில் பணிபுரிந்து வந்த நிலையில், 29.05.2024 அன்று விபத்துக்குள்ளாகி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக அவரை தமிழ்நாட்டுக்கு அழைத்து வர தமிழ்நாடு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்த நிலையில் தமிழ்நாடு அழைத்து வர ரூ.10,41,648/–யினை ஒதுக்கீடு செய்து, விமானம் மூலம் நள்ளிரவு 1 மணி அளவில் தாயகம் வந்தடைந்தவரை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக வழி அனுப்பினார். உடன் வெளிநாடுவாழ் தமிழர் நல ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, இணை ஆணையர் ரமேஷ், உள்ளிட்டோர் உள்ளனர்.

---

## முனைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான

# 16 வது நிதி ஆணையத்திடம் - ஆர்.எஸ்.பாரதி ஆலோசனைகள் வழங்கினார்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. உடன் இருந்தார்!

சென்னை, நவ.19- கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள், நேற்று - முனைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையத்திடம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆலோசனைகளை வழங்கினார்.



தமிழ்நாட்டுக்கு வருகை தந்துள்ள முனைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையம் நேற்று (18.11.2024), மாலை, சென்னை, கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட் ஓட்டலில் “அரசியல் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டம்” நடத்தியது.

இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டார்.

மேலும் திராவிட முன்னேற்றத்தின் கழகத்தின் சார்பில் பல்வேறு ஆலோசனை களை விரிவாக எழுத்துப் பூர்வமாக நிதிக்குழுத் தலைவரிடம் வழங்கினார்.

அப்போது கழக சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., உடனிருந்தார்.

மேற்படி ஆணையத்திடம் தாம் வழங்கிய மனுவில் குறிப்பிட்டிருந்த கருத்துகள் குறித்து ஆர்.எஸ். பாரதி அவர்கள் கூறியதாவது :

மாநில அரசுகளுக்கு நிதிப் பகிர்வில் மிகப்பெரிய முரண்பாடுகள் இருக்கிறது. ஒன்றிய அரசின் வரியில் 50 சதவிகிதத்தை மாநில அரசிற்கு வழங்க வேண்டும் என்பதை பிரதானமான கோரிக்கையாக வைத்திருக்கிறோம். அதே போல, ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு நிதி தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட நிதிகளை முறையாக வழங்க வேண்டும்; அதற்குரிய வழிவகைகளை நிதி ஆணையம் மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறோம்.

குறிப்பாக, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒப்புக் கொண்ட பணத்தையே வழங்கவில்லை.

அதேபோல, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இதுவரையில் வரலாறு காணாத ஒரு மிகப்பெரிய பேரிடர் தமிழ்நாட்டில் - தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் சென்ற ஆண்டு ஏற்பட்டது. அதனைச் சுட்டிக்காட்டி நிதி கேட்ட நேரத்தில் உரிய நிதியை ஒன்றிய அரசு வழங்கவில்லை. எனவே, அந்தப் பேரிடர் கால நிவாரண நிதியை ஒழுங்காக மாநில அரசுகளுக்கு பேரிடர் ஏற்படுகிறபோது, ஏற்படுகிற இழப்பிற்கு உரிய வகையில் நிதியினை வழங்குவதற்குரிய ஏற்பாட்டை நிதி ஆணையம் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறோம். அதேபோல, தமிழ்நாடு அரசு மிகப்பெரிய பல நல்ல மக்கள் நலத்திட்டங்களை வகுத்துக் கொண்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டை சிறப்பாகச் செயல்படுத்திய காரணத்தினால் தென்னாட்டில் இருக்கும் தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்களில் மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு அகில இந்திய அளவைப் பார்த்தால் குறைந்து வருகிற காரணத்தினால், நாட்டின் நலன் கருதி நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிற அரசுக்கு ஊக்கம் தர வேண்டுமே தவிர, அதற்கு மாறாக அவர்களுக்குத் தண்டனை வழங்குவதைப்போல கொடுக்கப்படுகிற நிதியினை குறைப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. எனவே, இனிவரும் காலங்களிலாவது அதுபோன்ற செயலைச் செய்யாமல் பார்த்துக் கொள்வதற்கு நிதி ஆணையம் உரிய வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட பல கோரிக்கைகளை வைத்திருக்கிறோம்.

இவை அனைத்தையும் 16வது நிதி ஆணையம் செயல்படுத்துவதற்குரிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் 50 சதவிகிதம் நிதி ஒதுக்கிட வேண்டும் என்பதை ஒட்டுமொத்தமாக கருத்துத் தெரிவித்தார்கள்.

அரசியல் வேறுபாடுகள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மாநிலத்திற்கு நிதி வழங்க வேண்டும் என்று அனைத்துத் தரப்பும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இதை மனதில் வைத்து தமிழகத்திற்கு 16வது நிதி ஆணையம் உரிய நீதியும், நியாயமும் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டார்.

---

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; உயர்ந்த மனிதாபிமானத்திற்கு அண்மை உதாரணம் எதையும் சொல்ல முடியுமா ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேச மாநிலம் ஜான்ஸி நகரத்தில் உள்ள மகாராணி லட்சுமிபாய் மருத்துவ மனையின், பச்சிளம் குழந்தைகள் பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில், 10 குழந்தைகள் பலியாயின.**

**விபத்தின்போது, தனது இரட்டைப் பெண் குழந்தைகளைப் பலி கொடுத்த 20 வயது யாகூப் மன்சூரி, சொந்த இழப்பையும் சோகத்தையும் கடந்து, விபத்தில் சிக்கிய 49 குழந்தைகளில் பலரைக் காப்பாற்றியிருக்கிறார். காப்பாற்றியவர் தனது குழந்தைகளின் எரிந்த சடலங்களோடு வந்தார்.**

**இதுதான் - அந்த இஸ்லாமிய சகோதரரின் தியாகச் செயல்தான் - இந்தியாவின் இன்றைய மிகப் பெரிய மனிதாபிமான நிகழ்வு !**